# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 144/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வபாரதி | Calling | : |
| Father/Husband's Name | : பரமசிவம் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26st February 2026.

1, 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 4,5ம் எதிரிகள் ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரச்சலூரில் வசித்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காலை 5.15மணிக்கு அரச்சலூரில் ரவுண்டாரான அருகில் உள்ள டீக்கடைக்கு நானும் எனது நண்பர் பிரதீப்–ம் சென்றோம். அப்போது அங்கே இருந்தவர்கள் இரவு பைனான்ஸ் சம்பந்தமாக பிரச்சனை என பேசிக்கொண்டிருந்தார்கள். நானும், பிரதீப்–ம் கோபி வீட்டிற்கு சென்றோம். அப்போது அரச்சலூர் போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், பிரதீப் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**1,3,4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கோபி அவர்கள் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். கோபிநாத், சரண்யா ஆகியோர்கள் எனக்கு நண்பர்கள். காலை 5.00 மணியளவில் என்னை விசாரித்தார்கள் என்பது பொய்

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.02.26 15:29:53 +0530

என்றால் சரியல்ல. வரைபடத்தில் என்ன இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அடிக்கடி கோபி வீட்டிற்கு சென்றுள்ளேன். கோபிநாத் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:29:59 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 144/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஷ் | Calling | : |
| Father/Husband's Name | : அர்ச்சுனன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26st February 2026.

1, 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 4, 5ம் எதிரிகள் ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தச்சங்காட்டுவலசில் குடியிருந்து கொண்டு கார் மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். கோபிநாத் மற்றும் சரண்யா எனது எதிர் வீட்டில் குடியிருக்கிறார்கள். 2022 ம் வருடம் ஜனவரி மாதம் தேதிஞாபகம் இல்லை, ஒருநாள் நள்ளிரவு 2.00 மணியளவில் நான் தூங்கி கொண்டிருந்தபோது ஏதோ சத்தம் போட்டதுபோல சத்தமாகவும், ஏதோ உடைத்து கொண்டிருக்கும் சத்தமும் கேட்டது. திடீரென்று சத்தம் அதிகமானது. நான் எழுந்து வந்தபோது பக்கத்து வீட்டில் உள்ளவர்களும் வந்தார்கள். கோபிநாத் வீட்டிற்கு அருகில் இருந்த சுப்பிரமணியன் மற்றும் பெரியவர் ஒருவர் செல்வதை பார்த்து நானும் சென்றேன். கோபிநாத்தின் வீட்டு கதவு உடைந்து இருந்தது. நான் உள்ளே சென்று பார்த்த போது முன்னால் 2,3 பேர் நின்று இருந்தார்கள். பின்னர் பார்த்தபோது மொத்தம் 5 பேர் வந்திருந்தார்கள். நான் என்னவென்று நாங்கள் கேட்டபோது தாயோழி நீங்கள் என்ன கேட்கீறிர்கள் அவன் எனக்கு பணம் தரவேண்டும் என்று ஆஜர் எதிரி திருநாவுக்கரசு (சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரான திருநாவுக்கரசை அடையாளம் காட்டினார்) பேசினார்.

2. பெட்ரூம் கதவை 5 பேரும் உடைத்தார்கள் உடனே கோபிநாத்-ம், அவரது மனைவியும் ஊர்க்காரர்கள் வருவதை பார்த்து வெளியில் வந்தார்கள். மீண்டும் தாயோழி, கண்டாரோழி, தேவடியா பையனே என்ற தகாத வார்த்தைகளால் பேசினார்கள். சத்தம் அதிகமானதை அடுத்து அருகில் இருப்பவர்கள் வந்தார்கள். கோபிநாத்தை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு அனைவரும் வருவதை பார்த்து பொலிரோ காரில் வந்த 5 நபர்களும் கிளம்பி விட்டார்கள். வந்த 5 நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:06 +0530

இருவரும் வந்தார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நபரும், கோபிநாத் வீட்டிற்கு வந்தார். மற்ற நபர்கள் இன்று நீதிமன்றத்தில் இல்லை. (எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டது). இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**1,3,4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் வழக்கு சம்பந்தமாக எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். கோபிநாத், சரண்யா ஆகியோர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவினர் அல்ல, பக்கத்து வீட்டுக்காரர். சுமார் எத்தனை நபர்கள் கூட்டம் கூடினார்கள் என்றால் 20 நபர்கள். கோபிநாத் வீட்டு கதவு என்ன கதவு என்றால் மரக்கதவு, அது பழங்காலத்து கதவு ஆகும். நான் பார்க்கும்பொழுது கதவை உடைத்து கொண்டிருந்தார்களா என்றால் முதல் கதவு உடைத்த சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தபோது 2வது கதவை உடைத்து கொண்டிருந்தார்கள். ஊர்மக்கள் வந்தவுடன் எதிரிகள் கிளம்பி விட்டார்களா என்றால் பேசிக்கொண்டிருந்தார்கள், பிறகு தான் கிளம்பி போனார்கள்.

2. வீட்டை உடைக்கும்போது கோபிநாத், சரண்யாவும் ஏதாவது உதவி கேட்டார்களா என்றால் அக்கம் பக்கம் எங்கள் சத்தத்தை கேட்ட பிறகு வீட்டிற்குள் இருந்த கோபிநாத்–ம் சரண்யாவும் கதவை நீக்கி வெளியில் வந்தார்கள். கதவை உடைப்பதை நான் தடுத்தேனா என்றால் தடுக்க போனோம். போலீஸார் கேட்டுக் கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## மறுவிசாரணை இல்லை

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:11 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 144/2024**

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : சொங்கப்பகவுண்டர் | Calling | : |
| Father/Husband's Name | : கருப்பணகவுண்டர் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26st February 2026.

1, 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 4,5ம் எதிரிகள் ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தச்சங்காட்டுவலசில் குடியிருந்து கொண்டு வீட்டில் இருக்கிறேன். அ.சா.1 கோபிநாத், அ.சா.2 சரண்யா இருவரும் எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார்கள். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 4 வருடங்களுக்கு ஒருநாள் நள்ளிரவு 1.00 மணியிலிருந்து 2.00 மணி இருக்கும். எனது பக்கத்து வீட்டான கோபிநாத் வீட்டில் டிமீர், டிமீர் என சத்தம் கேட்டது. நானும் சத்தம் போட்டேன். 4,5 பேர் வந்து கம்பியால் கோபிநாத்-ன் வீட்டு கதவை உடைத்தார்கள்.அருகில் இருந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் மற்றும் பங்காளிகள் அனைவரும் வந்துவிட்டார்கள். வந்த நபர்கள் கேப்புமாறி நாயே, அந்த நாய் இந்த நாய் என்ற தகாத வார்த்தையால் பேசினார்கள். ஊர்க்காரர்கள் வந்தவுடன் கோபிநாத்-ம், சரண்யாவும் வீட்டில் இருந்து வெளியில் வந்தார்கள். அனைவரும் வருவதை பார்த்து வந்த நபர்கள் சிவப்பு காரில் கிளம்பி சென்றுவிட்டார்கள்.

2. கோபிநாத்தின் வீட்டிற்கு வந்தவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள இருவரும் வந்தார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நபரும், கோபிநாத் வீட்டிற்கு வந்தார். மற்ற நபர்கள் இன்று நீதிமன்றத்தில் இல்லை. (எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டது). எதிரிகள் கொண்டு வந்த இரும்பு கம்பியை தற்போது என்னால் அடையாளம் சொல்லமுடியாது. 2,3 கம்பிகள் கொண்டு வந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:18 +0530

**1,3,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையத்திற்கு வைத்து விசாரித்தார்கள். கோபிநாத்தின் வீட்டிற்கு எத்தனை வீடு தள்ளி எனது வீடு உள்ளது என்றால் 2 வீடுகள் தள்ளி உள்ளது. கதவை உடைத்து உள்ளே போகும் போது நான் வந்தேனா என்றால் இல்லை, கதவை உடைக்கும் போதே வந்துவிட்டேன். முதலில் நான் தான் சென்றேனா என்றால் ஆமாம். ஊர்க்காரர்கள் வந்தபிறகு தான் கோபிநாத்–ம், சரண்யாவும் வெளியில் வந்தார்கள் என்றால் ஆமாம். கோபிநாத்–ம், சரண்யாவும் வெளியில் வருவதற்கு முன்பாகவே கதவை உடைத்தவர்கள் கிளம்பி விட்டார்களா என்றால் வெளியே வந்தபிறகும் ஊர் மக்கள் வர ஆரம்பித்ததை கண்டு ஓடிவிட்டார்கள்.

2. நள்ளிரவு 2.00 மணி என்பதாலும், எனது வயோதிகம் காரணமாக மேற்படி சமயத்தில் நான் சம்பவம் பற்றி தெரிந்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தினமும் அடிக்கடி சிறுநீர் கழிக்க செல்லும் வழக்கம் உள்ளதால் அப்போது இந்த வழக்கு சம்பவம் நடந்தது. முதலில் நான் சென்றபிறகு யாரை நான் அழைத்தேன் என்றால் பக்கத்தில் உள்ள பங்காளி சுப்பிரமணியனை அழைத்தேன். அ.சா.1 கோபிநாத் என்பவர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**5 ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:24 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 144/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : சரண்யா | Calling | : |
| Father/Husband's Name | : கோபிநாத் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26st February 2026.

1, 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 4,5 எதிரிகள் ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரச்சலூர் தச்சங்காட்டுவலசில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியக உள்ளேன். அ.சா.1 கோபிநாத் எனது கணவர் ஆவார். எனது கணவர் அரச்சலூாரில் சென்னிமலை ஆண்டவர் என்ற பெயரில் நிதிநிறுவனம் நடத்தி வருகிறார். ஆஜர் எதிரி திருநாவுக்கரசுடன் 27.08.2021 ம் தேதி எனது கணவர் நிதி நிறுவனம் ஒன்றை கொங்கு நகர் 2வது வீதியில் சிவன்மலை ஆண்டவர் என்ற பெயரில் பைனான்ஸ் ஆரம்பித்தார். அதில் 5 நபர்கள் பங்குதாரர்களாக இருந்தார்கள். திருநாவுக்கரசின் நடத்தை சரியில்லாமல் இருந்ததால் அந்த நிதி நிறுவனத்தில் இருந்து எனது கணவர் வெளியே வந்துவிட்டார். நிதி நிறுவனம் நடத்துவதற்காக பங்கு தொகையாக எனது கணவர் போட்ட ரூ.2லட்சத்தை எனது கணவர் திரும்ப கொடுக்கச்சொல்லி திருநாவுக்கரசிடம் கேட்டதால் அவர் அவருடைய மனைவியின் நகையை வைத்து எங்களுக்கு சேரவேண்டிய ரூ.2லட்சத்தை கொடுத்துவிட்டார். அந்த நிதிநிறுவனத்தில் பங்குதாரர்களில் ஒரு நபர் எனது கணவரின் பெரியம்மா மகன் நாகராஜ் ஆவார்.

2. அவரும் அவருடைய பங்குதொகையை திருப்பி கொடுக்கச்சொல்லி கேட்டதால் ஒரு வருடம் கழித்து கொடுப்பதாக திருநாவுக்கரசு சொன்னார். அதனால் எங்களிடமும் திருநாவுக்கரசு கொடுத்த ரூ.2லட்சத்தை மீண்டும் எங்களிடம் திருப்பி கேட்டார். 1 வருடம் கழித்து கொடுப்பதாக சொன்னார். அதனால் தான் பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 07.01.2022 ம் தேதியன்று எனக்கும் எனது கணவருக்கும் ஆஜர் எதிரி திருநாவுக்கரசு போன் செய்து பணத்தை திருப்பி கொடுங்கள் இல்லை என்றால் என்னை உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டினார். மறுநாள் நள்ளிரவு 2.00

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:30 +0530

மணியளவில் திருநாவுக்கரசுடன் 4 நபர்கள் (மொத்தம்5 நபர்கள்) எங்களுடைய வீட்டிற்கு வந்து வெளியில் உள்ள மரக்கதவை இரும்பு ராடால் உடைத்தார்கள். நானும், எனது கணவர் மற்றும் குழந்தை ஆகிய 3 பேரும் பெட்ரூமில் தூங்கி கொண்டிருந்தோம். கதவை உடைக்கும் சத்தம் கேட்டு அருகில் இருந்த சுப்பிரமணி, சொங்கப்ப கவுண்டர், மகேஷ் ஆகியோர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் ஏன் உடைக்கிறீர்கள் என்று திருநாவுக்கரசிடம் கேட்டபோது அவர்களையும் தாயோழி நான் அப்படி தான் செய்வேன், அவர்கள் எனக்கு தொகை கொடுக்க வேண்டும் இல்லை என்றால் நீ கொடுக்கிறாரா என்று கேட்டார்.

3. நாங்கள் கதவை திறந்து வெளியே வந்தோம். எனது கணவரை பார்த்தவுடன் திருநாவுக்கரசும், அவருடன் வந்தவர்கள் இரும்பு ராடால் என் கணவரை அடிக்க வந்தார்கள். அருகில் இருந்தவர்கள் அவர்களை பிடித்து விட்டார்கள். அவர்கள் போட்ட சத்தத்தில் ஊர் மக்கள் அனைவரும் வந்துவிட்டார்கள். வந்த 5 பேரும் சிவப்பு நிறமுடைய பொலிரோ ஜீப்பில் எங்கள் வீட்டிற்கு வந்து இருந்தார்கள். ஊர் மக்கள் வருவதை பார்த்து அவர்கள் 5 பேரும் கிளம்பி விட்டார்கள். விடியற்காலை 5.30 மணியளவில் எனது கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரி திருநாவுக்கரசுடன் வந்தவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நபரும், ஆஜராகியுள்ள நபரும் திருநாவுக்கரசுடன் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். மற்ற நபர்கள் இன்று நீதிமன்றத்தில் இல்லை. (எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டது) மேற்படி எதிரிகள் வந்த வாகனத்தையும், அவர்கள் என் கணவரை தாக்க வந்த இரும்பு ராடையும் தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும்.நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரும்பு ராடால் தான் எனது கணவரை தாக்க வந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

## 1,3,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1வது எதிரியிடமிருந்து எனது கணவர் தான் பணம் வாங்கியுள்ளார் என்றால் இல்லை, என் கணவர் பைனான்ஸ்-ல் பங்குதாரராக இருந்து விலகிய பணத்தை தான் கொடுத்தார்கள். அதை தான்திரும்ப கேட்டு பிரச்சனை ஏற்பட்டது. சம்பவ நடைபெற்றறதாக சொல்லும் நாளன்று முன்பக்க கதவு உடைக்கும் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்தபிறகு தான் நாங்கள் வெளியில் வந்தோமா என்றால் சரிதான், ஏனென்றால் எத்தனை பேர், என்ன ஆயுதங்கள் வைத்துள்ளார்கள் என்று தெரியாததால் பக்கத்து வீட்டுக்காரர் வந்தபிறகு தான் வெளியில் வந்தோம். உள்தாழ்பாளை உடைத்து வீட்டிற்குள்ளே உள்ளே வரமுடியாது என்றால் வீட்டில் ஹாலில் முன்புறம் ஒரு கதவும், எங்கள் வீட்டை ஒற்றியுள்ள மற்றொரு வீட்டின் சுவற்றில் குதித்து உள்ளே வந்து எங்கள் வீட்டின் முன்புற கதவை உடைத்தார்கள்

2. எங்கள் வீட்டிற்குள் வந்தபிறகு தான் கெட்ட வார்த்தைகள் பேசினார்களா என்றால் ஆமாம், பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தபிறகு தான் உள்ளே வந்து கெட்ட வார்த்தை பேசினார்கள், அவர்களையும் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். 1ம் எதிரி திருநாவுக்கரசு எப்போது எந்த நேரம் எனக்கு போன் செய்தார்கள் என்றால் நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவர் தான் 1ம் எதிரிக்கு போன் செய்துள்ளார்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:36 +0530

என்றால் சரியல்ல. நள்ளிரவு 2.00 மணிக்கு எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ததாகவும், அப்போது பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நள்ளிரவு 2.00 மணிக்கு துாங்கி கொண்டிருப்பதால் வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.அக்கம் பக்கத்தினர் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் முதலில் சுப்பிரமணி, சொங்கப்பகவுண்டர், மகேஷ் ஆகியோர் முதலில் வந்தார்கள், எதிரிகள் வந்த சத்தம் கேட்டவுடன் சுமார் 10 க்கு மேற்பட்டவர்கள் வந்துவிட்டார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க நானும் உடன் சென்றேனா என்றால் இல்லை. என்னை எப்போது போலீஸார் விசாரித்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து காவல்நிலையத்தில் விசாரித்தார்கள். 5 நபர்களில் யார் என்ன செய்தார்கள் என்றால் 5 நபர்களும் சேர்ந்து தான் எனது கணவரை அடிக்க வந்தார்கள்.

**5 ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

## மறுவிசாரணை இல்லை

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:41 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 144/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபிநாத் | Calling | : |
| Father/Husband's Name | : சின்னுசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26st February 2026.

1, 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 4, 5ம் எதிரிகள் ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரச்சலூர் தச்சங்காட்டுவலசில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக சென்னிமலை ஆண்டவர் என்ற பெயரில் பைனான்ஸ் நடத்தி வருகிறேன். கடந்த 27.08.2021 அன்று ஈரோட்டில் சிவன்மலை ஆண்டவர் என்ற பெயரில் பைனான்ஸ் என் அண்ணன் மூலமாக தலா ரூ.2லட்சம் 5 நபர்கள் சேர்ந்து முதலீடு போட்டு ஆரம்பித்தோம். என் அண்ணன் மூலமாக ஆஜர் 1 வது எதிரி திருநாவுக்கரசு அப்போது எனக்கு பழக்கம். அவரும் அந்த பைனான்ஸ் ஒரு பங்குதாரர் ஆவார். அவர் ஈரோட்டில் உள்ள பைனான்ஸ் அலுவலகத்தை பார்த்து வந்தார். அவருடைய நடவடிக்கைகள் சரியில்லாத நான் அந்த பைனான்ஸிலிருந்து விலகிவிட்டேன்.

2. எனக்கு எனது பங்கான ரூ.2லட்சத்தை திருநாவுக்கரசு கொடுத்துவிட்ட விபரம் என் அண்ணனுக்கு தெரியும். பின்னிட்டு என் அண்ணன் அந்த பைனான்ஸ் இருந்து விலகிவிட்டார். என் அண்ணனுடைய பங்கு ரூ.2லட்சத்தை ஒரு வருடம் கழித்து தருவதாக திருநாவுக்கரசு சொல்லியிருந்தார். பின்னிட்டு என்னை தொடர்பு கொண்ட 1 வது எதிரி எனக்கு ஏற்கனவே கொடுத்த பங்கு தொகையான ரூ.2லட்சத்தை திரும்ப தருமாறு கேட்டும், எனக்கும் ஒரு வருடம் கழித்து பணத்தை தருவதாக கேட்டார். அப்போது இந்த பணத்தை கேட்டு எனக்கும், என் மனைவிக்கும் தொடர்ச்சியாக

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:48 +0530

1வது எதிரி போன் செய்தார். 07.01.2022 அன்று போன் செய்து என்னிடம் பணத்தை கேட்டார். 08.01.2022 அன்று அதிகாலை 2.00 மணியளவில் வீட்டில் பெட்ரூமில் தூக்கி கொண்டிருந்தபோது 2 கதவுகள் இருந்ததுஅதில் இரும்பு ராடால் வெளியில் உள்ள முதல் கதவை உடைத்துவிட்டு 2வது பெட்ரூம் கதவை உடைக்கும் சத்தம் கேட்டது. மேற்படி கதவை உடைக்கும் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டை சேர்ந்த சுப்பிரமணி, சொங்கப்பகவுண்டர், மகேஸ் ஆகிய மூவரும் என் வீட்டிற்கு வந்தார்கள்.

3. நான் கதவு உடைக்கும் சத்தம் கேட்டு படுக்கை அறையில் இருந்து பக்கத்து வீட்டுக்காரர் வந்தவுடன் நானும் வெளியில் வந்தேன். அப்போது என்னை பார்த்து தாயோழி, கண்டாரோழி பயனே, தேவடியா பயனே என்று சொல்லிக்கொண்டு எதிரி கையில் வைத்திருந்த இரும்பு ராடால் என்னை அடிக்க வந்தார். அக்கம் கேட்டு அக்கம் இருந்தவர்கள் வந்து விட்டார்கள். திருநாவுக்கரசுக்கு சொந்தமான சிவப்பு கலர் பொலிரோ பதிவு எண். TN 33 AJ 9499 என்ற வாகனத்தில் மொத்தம் 5 நபர்கள் வந்தார்கள். அப்போது வீட்டில் இருந்து செல்லும் போது உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன்.

4. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு என் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்த நபர்களை நான் கொடுத்த புகாரின் பேரில் போலீஸார் கைது செய்து என்னிடம் காண்பிக்க நான் அடையாளம் காட்டி உறுதிப்படுத்தினேன். ஆஜர் எதிரிகள் இருவரும் என் வீட்டிற்கு அன்று வந்தவர்கள் ஆவார்கள். மேலும் இன்று 3 நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை அவர்கள் வந்திருந்தால் பார்த்தால் நான் அடையாளம் காட்டுவேன். (2வது எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்). 4 மற்றும் 5 ம் எதிரிகளை பொருத்து அடையாளத்தை பொருத்து ஆட்சேபம் இல்லை என்பது பதிவு செய்யப்பட்டது. மேற்படி எதிரிகள் வந்த வாகனத்தையும், அவர்கள் என்னை தாக்க வந்த இரும்பு ராடையும் தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். **மேற்படி பொலிரோ வாகனம் அ.சா.பொ.1 ஆகவும், இரும்பு ராடு அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:30:55 +0530

**1,3,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1வது எதிரியிடம் ரூ.2லட்சம் நான் கடன் வாங்கியிருந்தேன் என்றால் இல்லை. 07.01.2022 ம் அன்று 1ம் எதிரியிடம் வாங்கிய கடனை திருப்பி தருவதாகவும், எனவே வீட்டிற்கு வருமாறு நான் தான் போன் செய்து அழைத்தேன் என்றால் இல்லை. எனது புகாரில் 07.01.2022ம் 1ம் எதிரி எத்தனை மணிக்கு போன் செய்து என்னை பணம்கேட்டார் என்று நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பக்கத்து வீட்டை சேர்ந்த நபர்கள் வந்தபிறகு தான் நான் பெட்ரூமில் இருந்து வெளியே வந்தேன் என்றால் சரிதான், உள்ளூர்க்காரர்கள் வந்தபிறகு தான் வெளியே வந்தேன். நான் எதிரிகள் வெளிக்கதவை உடைத்ததாக பொய்யாக சொல்கிறேன், உண்மையாகவே அவர்கள் உடைத்திருந்தால் எனக்கு அந்த சத்தம் கேட்டிருக்கும் என்று சொன்னால் என்னுடைய படுக்கையறை பெரியஅறையில் தனியாக உள்ளதால் வெளிக்கதவை உடைத்தால் சத்தம் கேட்காது.

2. பக்கத்து வீட்டுக்காரர்களே சத்தம் கேட்டு வந்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் வீட்டிற்குள் இருக்கும் எனக்கு சத்தம் கேட்கவில்லை என்று நான் குறிப்பிடுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னபடி எதிரிகள் என்னை எந்த கெட்டவார்த்தையும் சொல்லி திட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரும்பு ராடால் கதவை உடைக்கும் போது உள்புற தாழ்பாள் போட்டிருக்கும் என்பதால் வெளியில் இருந்து அந்த கதவை உடைத்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால் சரியல்ல, கதவை உடைக்க முடியும், அவர்கள் உடைத்தார்கள்.

3. வீட்டிற்குள் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றும், யார் யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் 5 பேர்கள் வந்தார்கள், ஆள்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். 2,3 நபர்களின் பெயர்கள் தெரியும். எனக்கு யாருடைய பெயரும் தெரியாது என்றும், நான் சொன்னபடி யாரும் வரவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி திருநாவுக்கரசு என்பவரிடம் நான் கடன் வாங்கியிருந்ததால் அவருடைய பெயரை மட்டும் தவறாக குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்வது அதிகாலை 2.00 மணி என்று சொல்லும் நிலையில் நான் புகார் கொடுத்தது எப்போது என்றால் காலை 5.30 மணிக்கு கொடுத்தேன்.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:31:01 +0530

4. எப்பொழுது எதிரிகளை காவல்நிலையத்தில் அடையாளம் காட்டினேன் என்றால் காலை சுமார் 10.00 மணி இருக்கும். 1ம் எதிரியின் பைனான்ஸ் நிறுவனத்தில் நானும், எனது அண்ணனும் மட்டும் தான் பங்குதாரர்களாக இருந்தோம் என்றால் இல்லை, 5 நபர்கள் பங்குதாரர்கள். வழக்கு சம்பந்தமாக என் அண்ணனையும் சாட்சியாக விசாரித்தார்கள். 1ம் எதிரிக்கு நான் கொடுக்கவேண்டிய பணம் ரூ.2லட்சத்தை கொடுக்காமல் இருப்பதற்காக இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

5 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

07.01.2022 ம் தேதி திருநாவுக்கரசு எத்தனை மணிக்கு எனக்கு போன் செய்தார் என்றால் இரவு 10.00 மணி இருக்கும். அப்போது தான் நான் திருநாவுக்கரசை என் வீட்டிற்கு வந்த பணம் பெற்றுக்கொள்ளுமாறு சொன்னேன் என்றால் சரியல்ல. ஆனால் சம்பவ நடந்ததாக சொல்லும் தேதியன்று திருநாவுக்கரசு பணம் வாங்குவதற்கு என் வீட்டிற்கு வரவே இல்லை என்றும், நான் சொன்னபடி சம்பவம் நடக்கவே இல்லை என்றும், சம்பவம் அதிகாலை 2.00 மணிக்கு நடந்ததாகவும், அன்று காலை 5.30 மணிக்கு புகார் கொடுத்ததாகவும், காலை 10.00 மணிக்கு எதிரிகளை காவல்நிலையத்தில் அடையாளம் காட்டியதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை போலீஸார் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டும் போது நான் பார்த்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. காவல்நிலையத்தில் எதிரிகளை நேரில் பார்த்தற்கு பின்னிட்டு தான் என்னிடம் பொய்யாக புகார்மனு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எதிரிகளை போலீஸார் கைது செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுக்காமல் பழிவாங்கவேண்டும் என்பதற்காக இந்த பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.26 15:31:07 +0530